# இசையின் தோற்றமும், வளர்ச்சியும், பயன்களும்

விவிலிய நூலில் காண்கிறபடி மனிதகுலம் சுமார் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆதாம், ஏவாள் என்ற ஆதித்தாய் தந்தையர் மூலம் தோன்றியது. அவர்கள் இருவரும் குழந்தைப் பருவத்தை அறியாதவர்கள். வாலிபப்பருவமுடையவர்களாய் இறைவனால் படைக்கப்பட்டவர்கள். சுமார் ஆயிரம் வருடங்கள் கழித்தபோது ஆதாமின் மூத்த குமாரனாகிய காயின் வம்சத்தில் பிறந்த யூபால் கின்னரக்காரர், நாகசுரக்காரர் யாவருக்கும் தகப்பனானான். (ஆதியாகமம் 4:21 காண்க). அவனது காலத்திலேயே இசைக்கு ஆதாரமான ஸ்வரங்கள் தோன்றிவிட்டன.

பின்னர் ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டபின் கணக்கிடப்பட்ட 1656-வது ஆண்டில் நோவாவின் குடும்பத்தை மட்டும் பாதுகாத்து மீதியுள்ள மனிதர்களை வெள்ளத்தின் மூலம் கர்த்தர் அழித்தார். காயீனின் வம்சம் முற்றிலும் அழிந்து விட்டது. ஆதாமின் மூன்றாவது மகன் சேத்தின் வம்சத்தில் பிறந்த நோவா அழிவிலிருந்து பாதுகாக்கப்பட்டபடியால் அவர் மூலம் இசை வளர்ச்சியுற்றது. சுமார் கி.மு.1400-வது ஆண்டில் ஆரோனின் சகோதரியாகிய மிரியாம் தன் கையில் இசைக்கருவியுடன் பாடி நடனமாடினாள் (யாத்திராகமம் 15:20 காண்க)

பின்பு சுமார் கி.மு.1000-வது ஆண்டில் தாவீதும் இஸ்ரவேல் சந்ததியார் அனைவரும் சகலவித கீத வாத்தியங்களோடும், சுரமண்டலம், தம்புரு, மேளம், வீணை ஆகியவற்றின் இசையுடன் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக ஆடிப்பாடிக் கொண்டுபோனார்கள். (2 சாமுவேல் 6:5 காண்க).

தாவீது அரசன் ஆட்சி செய்த காலத்தில் பல பாடல்கள் புனையப்பட்டு ராகத்தலைவனிடம் (Music Director) ஒப்புவிக்கப்பட்டு இசையமைக்கப்பட்டன. ‘‘சங்கீதங்கள்’’ என்ற பகுதியில் இப்பாடல்களின் மொழிப்பெயர்ப்பை வாசிக்கிறோம்.

கர்த்தரைத்துதிப்பதும் ……… பத்து நரம்புவீணையினாலும் தம்புருவினாலும் ……… சுரமண்டலத்தினாலும் …….. காலையிலே உமது

கிருபையையும் இரவிலே உமது சத்தியத்தையும் அறிவிப்பதும் நலமாயிருக்கும் (சங்கீதம் 92:1 – 3) என்று விவிலிய நூலில் வாசிக்கிறோம். அப்போது மோகன ராகம் மட்டுமே பாடப்பட்டு வந்ததாகச் சரித்திரத்திலிருந்து இசை வல்லுநர்கள் கண்டறிந்துள்ளனர். அதை ஏற்றுக்கொண்டால்

“த ச ரி க ப த ச் ரி க் ப்” என்ற பத்து சுரங்கள் அவர்களது வீணையில் பத்து நரம்புகள் மூலம் மீட்டப்பட்டதாக யூகிக்கலாம்.

அதன் பின்னர் வந்த பத்து நூற்றாண்டுகளில் ம.நி. என்ற இருஸ்வரங்களும் கண்டுபிடிக்கப்பட்டு “சரிகபதநி” என்ற ஏழு ஸ்வரங்கள் இசையின் அடிப்படை ஸ்வரங்களாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டன. அவைகளே ஆங்கில இசையில் Major Scale என்ற பிரதான இசை ஸ்வரங்களாகவும் இந்திய இசையில் சங்கரா பரணராக ஸ்வரங்களாகவும் அமைந்துவிட்டன. கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிலப்பதிகாரத்தில் இசை பற்றிய பல அடிப்படைக் கருத்துக்கள் காணப்படுகின்றன. மேலும் தேவாரம், திருவாசகம் ஆகிய பக்திப் பாடல்கள் எழுதப்பட்டுக் கர்நாடக இசையின் ஆரம்பக்கட்டம் தோன்றியது. அது தமிழ்நாட்டில் தோன்றியதால் ‘தமிழ் இசை’ என்று பெயர் பெற்றது. அப்போது ரி, க, ம, த, நி என்ற ஐந்து ஸ்வரங்களின் இரண்டாவது வகையும் தோன்றிவிட்டதால் மொத்தம் பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்கள் ஏற்பட்டுவிட்டன. அதன் மூலம் ‘சரிகமபதநி’ என்ற ஐந்து ஸ்வரங்களின் இரண்டாவது வகையும் தோன்றிவிட்டதால் மொத்தம் பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்கள் ஏற்பட்டுவிட்டன. அதன் மூலம் ‘சரிகமபதநி’ என்ற சம்பூரண ஸ்வரக்கோர்வைக்கும் 2 x 2 x 2 x 2 x 2 = 32 வகையில் ஏற்பட்டபடியால் அந்த 32-ம் தாய் ராகங்களாக ஏற்பட்டுவிட்டன.

பல நூற்றாண்டுக்களுக்குப் பின்னர் ரி, க, என்ற ஸ்வரங்களை க0, ரி1 என்றும் த2 நி1 என்ற ஸ்வரங்களை நி0 த3 என்றும் மறுபெயர் வைத்து மொத்தம் பதினாறு ஸ்வரப்பெயர்களைத் தந்துவிட்டனர், சங்கீத மேதைகள். அதன் விளைவாக இன்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறபடி 72 தாய் ராகங்கள் கர்நாடக இசையில் உள்ளன. “கர்நாடக” என்ற பதம் மிகப்பழமையான என்ற பொருள்படும். உலக அளவில் இவ்வளவு அதிகமான தாய் ராகங்களைக் கொண்ட ஒரே அமைப்பு கர்நாடக இசை ஒன்றுதான். இவற்றிலிருந்து ஸ்வரவர்ஜம் ( = deletion of one or two swaras) ஸ்வரவக்ரம் ( = rearrangement of the order of swaras), அந்நியஸ்வரக்கலப்பு (= வேறு தாய் ராகஸ்வரங்களைக் கலத்தல்), ஸ்வரமேல் வரம்பு ஆகிய முக்கிய மாற்றங்களைக் கொண்டு ஆயிரக்கணக்கான கிளை ராகங்கள் உருவாக்கப்பட்டு விட்டன. கிறிஸ்தவ இசை அறிஞர்களும் இந்த ராக

அமைப்பைக் கற்றறிந்து ஏராளமான கீர்த்தனைகளை இயற்றிக் கர்த்தரைப் பாடி மகிமைப்படுத்தியுள்ளனர். தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், மாயூரம் வேதநாயகம் பிள்ளை, நாகர்கோவில் ஜான் பால்மர், சென்னை பரமானந்தம் ஐயர் ஆகியோர் அந்த இசைப்புலவர்களில் ஒருசிலராவர். கிறிஸ்தவ சபையாரின் பக்திவிருத்திக்கு அனுகூலமான ஏராளமான கீர்த்தனைகள் இக்காலத்தில் கர்நாடக இசையில் அமைந்துள்ளன. பாடர்களின் எண்ணிக்கை தான் மிகவும் குறைவாக உள்ளது.

இசை மனுக்குலத்தின் பொதுச் சொத்து. மேலும் செவிக்குணவாக அமைந்து மனிதர்களின் வாழ்க்கையில் மகிழ்ச்சியைப் பெருக்கும் ஒரு முக்கிய அம்சமாக இசை விளங்குகிறது. மன இறுக்கத்தால் (Mental Strain) அவதிப்படுபவர்கள் ஒவ்வொருநாளும் ஒன்றிரண்டு மணி நேரம் இசை கேட்கும் வழக்கத்தை மேற்கொண்டால் மன இறுக்கம் குறைந்து சரீர சுகம் பெருகும். பக்தி பாடல்களைக் கேட்பதன் மூலம் பாடுவதன் மூலமும் பாடல்களில் உள்ள உயர்ந்த கருத்துக்கள் மனதில் பதிந்து விசுவாசம் வளர வழி ஏற்படும்.

கிறிஸ்தவ கீர்த்தனைகளைத் தூய தமிழ் இசையில் பாடவும், பாடல்களைக் கேட்கவும், கிறிஸ்தவ சபையார் முயல வேண்டும். அது பக்திவிருத்திக்கு ஏற்ற முக்கிய சாதனமாக அமைவதற்கு வாய்ப்பு உண்டு.

**Dr.S.அலெக்சாண்ட**